**அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2017**
--------------------------------------------------------------------

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவுகள் முகாமைத்துவ சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
--------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
--------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டு பெறுமதி ரூபா 29,091,561 தொகைக்கான 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத அனர்த்தங்களை குறைக்கும் 12 செயற்திட்டங்களுக்காக 04 மாவட்ட செயலகங்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 9,185,679 இற்கான தொகை, நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டுவதற்கு பதிலாக ஆதனங்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 308,559,783 தொகைக்கான திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த மூலதன மானிய மீதி, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் ரூபா 675,361,071 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 2,060,785 தொகை மதிப்பீட்டு பெறுமதியான கொண்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெல்ஜியம் வீடமைப்பு முறைமையின் ஒரு பகுதியில் வடிகால் முறையில் திருத்த வேலைகள் மற்றும் தேவையான இடங்களில் மதகுகள் நிர்மாணிக்கும் 2 வேலை விடயங்கள் தொடர்பாக உரிய விரிவான மொத்த திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் பந்தி 5 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தம் குறைந்தளவு முகாமைத்துவ சபையின் கூட்டங்கள் 04 தடவைகள் கூட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 02 தடவைகள் மாத்திரம் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | ஆரச பெறுகை வழிகாட்டல் கோவை | |
| | (i) வழிகாட்டல் 3.4.3 | நிலையத்தின் பெறுகைகள் அலுவல்களுக்காக வழங்குனர்கள் பதிவு செய்தல் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டல்கள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) வழிகாட்டல் 5.3.11(அ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட ரூபா 23,228,675 மதிப்பீட்டு பெறுமதியான 09 அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்காக விலைமனு பாதுகாப்பு பிணைமுறி சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 104(3) | 2015 முதல் 2018 மே 30 திகதி வரை இடம் பெற்ற 17 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை அனுப்பியிருக்கவில்லை. |
| (ஈ) | நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்த 2017/01 ஆம் இலக்க 2017 பெப்ரவரி 21 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | செயற்திட்டமொன்று தெரிவு செய்யும் போது பொது மக்களின் எதிர்புக்கள் குறைவாக இருக்கக் கூடியவிதமாக மற்றும் அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்வதற்கு தேவைப்படாத செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனினும், மதிப்பீட்டு பெறுமதி ரூபா 85,213,525 தொகைக்கான 8 மாவட்டங்களில் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த 16 செயற்திட்டங்கள் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக 2017 ஆண்டில் செயற்படுத்தி இருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் செயற்பாட்டு அலுவல்களின் விளைவுகள் ரூபா 62,963,156 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,159,474 தொகையாக காணப்படாமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளின் ரூபா 56,803,682 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்கான வருமானம் ரூபா 77,935,871 தொகை இனால் அதிகரித்திருந்த போதிலும் செலவு ரூபா 138,275,300 இனால் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 9,452,720 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2014 ஆண்டின் போது ரூபா 2,616,061 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், மீண்டும் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது முறையே ரூபா 12,255,473 , ரூபா 6,159,474 , ரூபா 62,963,156 பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 274,159,353 தொகையான பங்களிப்பு 2014 ஆண்டின் போது வளர்ச்சியடைந்து 2015 ஆண்டின் போது வீழ்ச்சி ஒன்றிற்கு ஆளாகியிருந்த போதிலும் மீண்டும் 2016 ஆண்டு முதல் வளர்ச்சி அடைந்து 2017 ஆண்டின் போது ரூபா 261,166,505 தொகை ஆகியிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் திருத்த அலுவல்கள் 2008 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2017 திசெம்பர் 31 திகதி வரை உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் 2(அ) வின் பிரகாரம் நிலையத்தினால் தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2017 ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் நிலையத்திற்கு வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் 2018 – 2030 வரையான காலப்பகுதிகளுக்காக புதிய திட்டமொன்று தயாரித்தல் 2017 மார்ச் 07 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அவ் அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செந்தாய் சட்டகத்தின் பிரகாரம் அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் திட்டமொன்று தயாரிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2015 ஆண்டின் போது நிலையத்திற்கு வழங்கியிருந்த ரூபா 1,300,000 இற்கான தொகையில் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நிலையத்தினால் ரூபா 318,582 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. மேற்கூறிய திட்டத்தை தயாரிக்கும் அலுவல்கள் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டுமென நிலையத்தினால் கடந்த ஆண்டு கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும் அமைச்சினால் அவ்வாறான திட்டமொன்று தயாரிப்பதற்காக 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

நிலையத்தின் அனர்த்தங்கள் குறைக்கும் செயற்திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக கொழும்பு, கம்பஹா மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 1,095 தொகை, 10,408 தொகை மற்றும் 4,596 தொகை ஆக காணப்பட்டதுடன், 2016 ஆண்டின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர்களின்

எண்ணிக்கை முறையே 255,188 தொகை, 138,045 தொகை மற்றும் 6,583 தொகையாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம், ஆபத்தினை சரியான முறையில் பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால், 2017 ஆண்டிற்காக அம்மாவட்டங்களுக்கான பணம் ஏதும் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

மேலும், மேற்கூறிய மாவட்டங்களுக்கு ஒப்பாக குருநாகல் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் அதாவது 2015 ஆண்டில் 556, 2016 இல் 12,048 தொகைகளில் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது வெள்ள அனர்த்தை குறைத்தல் தொடர்பாக ரூபா 354,434,069 இற்கான ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தியிருந்த 176 செயற்திட்டங்களில் 87 செயற்திட்டங்கள் அதாவது, மொத்த செயற்திட்ட எண்ணிக்கையில் 49 சதவீதத்திற்காக மொத்த ஏற்பாடுகளில் 21 சதவீதம் அதாவது, ரூபா 73,913,285 தொகை செலவிடப்பட்டு குருநாகல் மாவட்டத்தில் செயற்படுத்தியிருந்தது. அவ்வாறாயினும், கூடுதலான எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்ட காலி, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 2.5 சதவீதம் முதல் 8 சதவீதம் எண்ணிக்கை மாத்திரமே. அதற்கு மேலதிகமாக 11 புனர்நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 12,809,434 தொகை மற்றும் மழையினால் பாதைகள் சேதமடைவதை குறைக்கும் 12 செயற்திட்டங்களுக்கான ரூபா 22,006,835 தொகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த அனைத்து செயற்திட்டங்களும் குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெள்ளம், வரட்சி, மண்சரிவு, விலங்குளின் உபத்திரவங்கள், அவசர அனர்த்தங்கள் ஆக பெயரிடப்பட்டிருந்த 05 வகையான முக்கிய அனர்த்தங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 480 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் விலங்குகளின் தாக்குதல்கள் காரணமாக 2016 மற்றும் 2017 ஆண்டின் போதும் ஆட்கள் மரண எண்ணிக்கை முறையே 68 தொகை மற்றும் 58 தொகை ஆகவும், அதன் மூலம் விபத்திற்குள்ளாகிய ஆட்கள் எண்ணிக்கை 2,043 தொகை மற்றும் 6,947 தொகை என குறிப்பிட்டிருந்தது போதிலும், அதற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்திருந்த மொத்த தொகை ரூபா 1.78 மில்லியன் அதாவது, நபர் ஒருவருக்கு ரூபா 254 மாத்திரமே. இதன் காரணமாக விலங்குகளின் உபத்திரவங்கள் மூலம் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக நிலையத்தினால் கூடிய கவனம் செலுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) நிலையத்தினால் வழங்கியிருந்த அறிவுரைகளின் பிரகாரம் மாவட்ட செயலாளர்களினால் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் அலுவல்கள் முடிவடைந்தவுடன் வேலை முடிவடைந்தற்கான அறிக்கைகள் நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டியதுடன், அதன் அடிப்படையில் இறுதி கொடுப்பனவு மேற்கொள்ள்பபடும். எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 பெப்ரவரி 17 அளவிலும் இறுதி வேலை அறிக்கைகள் சமர்பித்திருக்காத 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 13,507,644 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அநுராதபுரம், பதுளை, நுவர-எலிய, கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்ட செயலகங்களில் ஊடாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 42,185,609 தொகைக்கான 07 செயற்திட்டங்களுக்காக குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 4,512,287 இற்கான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பல்வேறு காரணங்களுக்காக அச் செயற்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முற்பணக் கணக்கு மீண்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்ட 1½ மாதங்கள் முதல் 8½ மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னரேயாகும்.

(உ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தலின் கீழ் அவசரச் செயற்பாட்டு பிரிவுக்காக இரண்டு ஹயிபிரிட் வீடுகள் ரூபா 1.2 மில்லியன் ஏற்பாடுகளின் மீது கொள்வனவு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், அவ்விடயத்தை நிறைவேற்றுவதற்காக கூறுவிலை அழைப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணமாக பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் அப்பெறுகை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் திடீர் வெள்ள அனர்த்தங்களுக்கு பதில் கொடுப்பதற்காக 2017 பாதீட்டு ஏற்பாடுகளின் கீழ் 125 படகு என்ஜின்கள் கொள்வனவு செய்தவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், செய்முறையில் ஏற்பட்ட சிக்கல் தன்மையின் காரணத்தினால் 2017 திசெம்பர் 08 ஆம் திகதியில் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் அந்த பெறுகையும் இரத்து செய்யப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வளிமண்டளவியல் திணைக்களத்திற்கு சொந்தமான காணி ஒன்றில் ரூபா 1,034,399,368 தொகை செலவில் நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் 2010 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணி மற்றும் கட்டிடம் நிலையத்திற்கு உரித்தாக்கும் விடயங்கள் மீளாய்வாண்டு இறுதி தினம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் 2005 மற்றும் 2006 ஆண்டுகளின் போது 07 மோட்டார் சைக்கிள்களும், 2015 ஆண்டின் போது 02 மோட்டார் சைக்கிள்களும் மற்றும் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் சமர்பிக்கப்படாத 09 மோட்டார் சைக்கிள்களுமாக நிலையத்திற்கு கிடைத்திருந்த 18 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அவற்றின் ஓட்ட நிலைமை, நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர் ஆகிய விடயங்கள் தொடர்பாக தொடர் விபரப் பரிசோதனை ஒன்று நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படல் போலவே சொத்துக்களின் நீடித்திருத்தல் தொடர்பாகவும் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

(இ) 2017 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திலும் உட்படுத்தப்பட்டிருக்காத இரண்டு மோட்டார் வாகனங்கள் 05 வருட காலப்பகுதிக்காக செயற்பாட்டு லீஸின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2017 திசெம்பர் 11 திகதி அனுகியிருந்த உடன்படிக்கையின் 7(இ) பந்தியை ஒருதலைபட்சமாக மீறிய காரணத்தினால் ரூபா 3,293,941 இற்கு தண்டப்பணம் ஒன்று செலுத்தும் படி வழங்குனர் நிறுவனத்தினால் நிலையத்திற்கு 2018 மே 23 திகதி எழுத்துமூலம் அறிவித்திருந்தது. அதேபோல் 2016 பெப்ரவரி 23 திகதி முதல் 2018 ஜுன் 30 திகதி வரையும் வெற்றிடமாக காணப்பட்ட 02 பதவிகளை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமல் அப் பதவிகளுக்காக இணைப்பதற்காக அந்த வாகனங்கள் பெறப்பட்டிருந்தன என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்காக எல்லா வகையிலும் நிறைவான பயிற்சி நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக 2015 ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 123 மில்லியன் தொகையும் 2017 குறைநிரப்பு ஏற்பாடுகளின் மூலம் ரூபா 50 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிலையத்தை நிறுவுவதற்காக பொருத்தமான காணி ஒன்று பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் நிர்மான வேலைகள் 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

அனர்த்தங்களுக்காக பதில் அளிக்கும் விடயங்களின் கீழ் கொள்வனவு செய்திருந்த ரூபா 7,166,319 பெறுமதியான 10 வகையான உபகரணங்கள் மற்றும் ரூபா 6,264,973 தொகைக்கான 09 வகையான நிலையான சொத்துக்களும் பல்வேறு நிறுவனங்களில் இருந்து நிலையத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த புத்தகங்கள் மற்றும் வீடியோ நாடாக்கள் பாரிய எண்ணிக்கையானவைகளும், 01 வருடம் முதல் 3½ வருடங்கள் வரையான காலம் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், ரூபா 110,100 பெறுமதியான தோண்டும் இயந்திரங்களின் 02 டயர்களும் 08 வருடங்களை அண்மித்த காலம் களஞ்சியத்தில் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.4 பதவியணிகள் நிருவாகம்

2016 ஆகஸ்ட் 25 திகதி முதல் நிலையத்தில் பணிப்பாளர் நிதி மற்றும் பணிப்பாளர் மனித வளம் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அப் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்காக 2018 ஜூன் 05 திகதி நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால், பணிப்பாளர் நிதி பதவிக்கு தகைமையுடைய ஆளொன்றை விதப்புரைத்திருந்த போதிலும், நிலையத்தினால் அவ்வெற்றிடத்தை நிரப்பியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மற்றும் நிலையத்தின் இடைக்கால குழுவின் அங்கீகாரமும் இன்றி அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் MDM/AD/05/DMC/NR(D)/VOL – III - 2017 இலக்கம் கொண்ட முறையே 2018 ஜூலை 18 மற்றும் 2018 ஜூலை 26 வழங்கியிருந்த மேற்கூறிய இரண்டு பதவிகளில் பதில் கடமை ஆற்றுவதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் எல்லா அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்ல ாளுகையும்

## 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செய்முறை

### 6.1.1 பெறுகைகள்

நிலையத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டங்கள், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் விதந்துரையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் செயல்முறைகளை செயற்படுத்தும் போது ஏற்பட்டிருந்த பலவீனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) களஞ்சிப்படுத்தல், குறிததொதுக்கிய விநியோக நடைமுறையொன்றினை திட்டமிடல் மற்றும் தடுத்து வைக்கும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் சார் காரணிகள் மீது கவனம் செலுத்தாமல் அவசர கொள்வனவு என 100 படகுகளுக்கான பூட்டுகள் கொள்வனவு செய்தவதற்கான திருத்திய வருடாந்த பெறுகை திட்டத்தின் மூலம் ரூபா 13 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 10 படகுகளுடைய பூட்டுக்கள் மாத்திரம் பெற்றுக்ககொள்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது. ரூபா 11,160,000 பெறுமதியான 90 படகு பூட்டுகள் அத்திகதி உள்ளவாறு வழங்னரிடம் பொறுப்பில் காணப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 77 பூர்வ விபத்து அறிவித்தல் கோபுரங்களின் மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்புக்களுக்காக விலைமனுதாரர்களினால் பல்வேறு விடயங்களின் எண்ணிக்கையை பயன்படுத்தி மற்றும் சில விடங்களுக்காக கூறுவிலைகளை சமர்பிக்காமல் விலைமனுக்கள் சமர்பித்திருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விலைமனுதாரர்கள் சமர்பித்திருந்த மொத்த கிரய பெறுமதியை பயன்படுத்தி விலைமனு மதிப்பாய்வு செய்த காரணத்தினால் குறைந்த விலைமனுவை விட ரூபா 41,993,083 தொகை கூடிய பெறுமதிக்கான ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. மேலும், சமர்பித்திருந்த விலைமனு பதிவேடுகளின் கணக்கு எண் கணிதம், தவறுகள், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் சரிசெய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிலையத்தினால் 75 டிரக்டர் மவுன்டட் குடிநீர் பவுசர்கள் பெற்றுக்கொள்வதற்காக பெறுகையின் போது டிரக்டர் நீர் மற்றும் பவுசர்கள் ஒரு விடயம் எனக் கணித்து கூறுவிலை அழைக்கப்பட்ட காரணத்தினால் அலகு ஒன்றிற்கு ரூபா 1,919,900 தொகை செலவிடுவதற்கு நேரிட்டிருந்ததுடன், அக் காலப்பகுதியில் தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினாலும் மேற்கூறிய முறையில் டிரக்டர் மற்றும் நீர்பவுசர்களுக்காக வெவ்வேறாக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு அலகு ஒன்றிற்கு ரூபா 1,749,000 இற்கான விலைக்கு குறிப்பிட்ட பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிலையத்தினால் அலகு ஒன்றிற்கு ரூபா 170,900 வீதம் டிரக்டர் பவுசர் குடிநீர் பவுசர் 75 கொள்வனவு செய்வதற்காக ரூபா 12,817,500 தொகை மேலதிகமாக செலுத்தியிருந்தது. மேலும், மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஏப்ரல் 03 திகதிக்கு முன்னர் பெறுகை நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அத் திகதியில் உள்ளவாறு கிடைத்திருந்த டிரக்டர் மவுன்டட் குடிநீர் பவுசர்கள் 55 தொகை மாத்திரமாமே.

(ஈ) கடந்த ஆண்டின் போதும் மற்றும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 36,348,392 தொகைக்காக கொள்வனவு செய்திருந்த 152 வள்ளங்களுக்காக என்ஜின்கள் காணப்படாமையால், உரிய விடயங்களுக்கு பயன்படுத்த முடியாதிருந்ததுடன், 2017 மே மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ள சந்தர்ப்பங்களில் வெளிசாராரிடம் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வள்ளங்களுக்காக ரூபா 600,000 தொகை செலுத்துவதற்காக நிலையத்திற்கு நேரிட்டிருந்தது. மேலும் அனர்த்தங்கள் ஏதும் காணப்படாத சந்தர்ப்பங்களில் அவசர கொள்வனவுகள் என கணித்து ரூபா 18.48 மில்லியன் கிரயத்தில் 2017 ஜூன் மாதத்தில் 42 வள்ளங்களுக்கான என்ஜின்கள் கொள்வனவு செய்திருந்தது. அவற்றில் 12 வள்ளங்களின் என்ஜின்கள் விநியோகித்திருந்ததுடன், விநியோகிக்கப்படாமல் 30 என்ஜின்கள் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆண்டின் போது பல்மாதிரி அனர்த்த ஆபத்துக்கள் பகுப்பாய்வு அலுவல்களுக்காக ரூபா 5,806,862 தொகை செலவிடப்பட்டு மென்பொருள் கணினி முறைமையொன்று மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், 2017 ஆண்டிற்கான ஏற்பாடுகளின் மூலம் ரூபா 205,200 தொகை செலவிடப்பட்டு இந்த விடயத்திற்காக பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தது. அதே போல் 2017 ஆண்டில் இவ்விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 53 மில்லியன்

தேசிய கட்டிட ஆய்வு அமைப்பிற்கு திறைசேரி அங்கீகாரத்தின் மீது மாற்றியிருந்ததுடன், பலமாதிரி அனர்த்தங்கள் ஆபத்து பகுப்பாய்வு அலுவல்கள் உரிய விதத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தேசிய தேவை மீது நிலையம் முறையான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**6.1.2 ஒப்பந்த நிருவாகக் குறைபாடுகள்**

அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 413,053,476 இற்கான தொகையொன்று மாவட்ட செயலகங்களுக்கு ஏற்பாடு செய்திருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கெப்பிட்டியாவ வடக்கு பிரிவில் கலேவெல குளம் ரூபா 04 மில்லியன் தொகை செலவிடப்பட்டு புணரமைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், குளத்தில் அணைக்கரையில் சில இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அணைக்கட்டிற்கு அண்மையில் போடப்பட்டிருந்த மண் சிறந்த முறையில் நெருக்கப்படாமல் புற்கள் பிடித்திருக்காமையால் மண் கரைந்து செல்வதற்கு இடம் காணப்பட்டமையால் குளத்தில் அணைக்கரையில் பாதுகாப்பிற்கு சவாலாக இருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த அங்குனுகொல பெலஸ்ஸ திஸாகே குளம் புணரமைப்பு செய்யும் செயற்திட்டம் 05 வேலை விடயங்களுக்காக ரூபா 3,528,725 இற்கான பெறுமதிக்கு நிர்மாண வேலை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரூபா 2,614,158 பெறுமதியான 02 வேலை விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்துடன், மீதியான 03 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் குளத்தில் 5,112 கன மீற்றர் வண்டல் மண் இயந்திரத்தின் மூலம் அகற்றப்பட்டு ¼ மைல் தூரத்திற்கு எடுத்து செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 2,371,968 தொகை செலுத்தியிருந்த போதிலும், குளத்தின் கொள்திறன் அதிகரிக்கக்கூடிய விதமாக வண்டல் மண் அகற்றப்பட்டிருக்காததுடன், அகற்றப்பட்ட வண்டல் மண் குளத்தில் இரு பக்கங்களிலும் போடப்பட்டிருந்தது.

(ஆ) நுவரஎலிய மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களை குறைப்பதற்கான செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நுவரஎலிய பிரதேச செயலகத்துடன் இணைந்த சீதாஎலிய கிராமத்தின் ஊடாக ஓடக்கூடிய கால்வாயில் 77 மீற்றர் பகுதியொன்று ரூபா 1,838,170 தொகை செலவிடப்பட்டு விரிவாக்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 30 மீற்றர்கள் பகுதியொன்று தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டதினால் கால்வாயினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) நுவரஎலிய பிரதேச செயலகத்துடன் இணைந்து கடுமான ரோஸ் பூந்தோட்ட உள்ளக பாதையினை கொங்கிரீட் பரப்பி வடிகால் முறையை தயாரித்து தரும்படி பிரதேச மக்கள் பிரதேச செயலாளரை வேண்டியதுடன், அதற்காக ரூபா 1,889,207 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 2,656,000 இற்கான மதிப்பீட்டு விலைக்கு பாதையை காபட் பரப்புவதற்கு மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) கேகாலை மாவட்டத்தில் 06 குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் ரூபா 1,443,972 தொகை செலவிடப்பட்டு 2017 நவம்பர் அளவில் பூர்த்தி செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 30 திதகி வரையும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த வேலை பெறுமதி ரூபா 6,788,416 தொகைக்கான பதுளை மாவட்ட மீகஹகிவுல கரதகஹமட அணைக்கட்டின் புணர்நிர்மாண வேலைகள் ரூபா 5,713,609 தொகை செலவிடப்பட்டு 2017 மே 17 அளவில் பூர்த்தி செய்திருந்த போதிலும், அவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இரண்டு இடங்களில் நீர் ஒழுகுவதாக 2018 மே 14 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2018 ஆகஸ்ட் 02 திகதி வரை இந்த குறைபாடுகளை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2016 ஆண்டின் போது ரூபா 10,776,598 தொகை செலவிடப்பட்டு கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி நகரத்தில் வெள்ள நிலைமையை குறைப்பதற்காக வடிகால் முறை ஒன்றினை தயாரித்திருந்த போதிலும் மழை காலங்களில் பாதை மற்றும் அண்மித்த பிரதேசங்களில் நீர் நிரம்புகிறது என 2018 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ஊ) 2014 ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட மதிப்பீட்டு கிரயம் ரூபா 32,900,000 தொகைக்கான அக்குரணை நகரில் வெள்ள அனர்த்தங்கள் குறைக்கும் செயற்திட்டம் தொடர்பாக கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் கீழ் அக்குரணை பிரதேசத்தில் மற்றும் பிகா ஓயா மற்றும் வஹகல் ஓயா சேற்றினை அகற்றும் கருமங்கள் ஒரே ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ஒப்பந்த உடன்படிக்கை 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த வேலை சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கவில்லை.

(ii) குறிப்பிட்ட ஆற்று வடி நிலங்களில் 20 கிலோ மீற்றர் தூரத்திற்குள்ள வண்டல் மண் 17.116 கியுப்களை தோண்டி எடுத்துச் சென்றிருந்ததுடன் 1992 இன் 35 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் அதற்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(iii) வண்டல் மண்/ மண் 3000 கனமீற்றர் எடுத்துச் செல்வதற்காக ரூபா 4,850,000 (வரி இன்றி) தொகைக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் உண்மையாகவே வண்டல் மண்/ மண் 4,416.78 கனமீற்றர் அகற்றப்பட்டதாக குறிப்பிட்டு சமர்பித்திருந்த சிட்டைக்காக ரூபா 7,088,553 தொகை (வரி இன்றி) கொடுப்பனவு செய்திருந்த காரணத்தினால் உடன்பட்டிருந்த தொகையை மிகைத்து ரூபா 2,238,553 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 6.1.3 தாமதமான செயற்திட்டங்கள்

உடன்படிக்கையின் பிரகாரம் 2017 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குருநாகல் மாவட்டத்தின் எஹடுவெவ பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,980,088 தொகைக்கான 09 செயற்திட்டங்களை உரிய நியமங்களுடனான துண்டுக் கற்கள் பெற்றுக் கொள்ள முடியாமையினால் 2018 பெப்ரவரி 26 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**6.2 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்**

நிலையத்தினால் 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை 2018 ஜுன் 19 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

**6.3 தீர்க்கப்பட்டிருக்காத கணக்க்காய்வு பந்திகள்**

2012 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நிலையத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்கு உள்ளாகி ஆண் ஒருவர் இறந்த காரணத்தினால் பங்கமுற்ற தரப்பினரால் 2014 ஆகஸ்ட் 07 திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவகத்திற்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்திருந்ததுடன், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பெறுகை | (i) அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இன்றி செயற்பட்டு லீஸின் முறையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளல்.<br>(ii) செயலாற்றுகை பிணைமுறி மற்றும் விலைகூறல் பிணைமுறி பெற்றுக்கொள்ளாமல் மற்றும் விலைகூறல் ஆவணங்களின் குறிப்பிடப்படாத அவதானிப்புக்கள் அடிப்படையில் கொண்டு மதிப்பாய்வுகள் மேற்கொண்டிருத்தல்.<br>(iii) திடீர் அனர்த்த தேவைகளுக்கு பயன்படுத்த முடியாதவாறு அவசர தேவையின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம் | நிலையத்தின் அனைத்து பிரிவுகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கவில்லை. |
| (இ) அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்கள் | செயற்திட்டங்களை அடிக்கடி மாற்றியமைத்தல். |